12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு
<u>சித்தர் அரசயோகிக் கருவூரூர் அவர்கள் அருளியது</u>

# <u>ஓர் இந்துமத விளக்கம்</u>

ஓம் குருவே போற்றி! ஓம் குரு குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!



இந்துமதத் தந்தை, இந்து வேத நாயகம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்.

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,118 **மார்கழி** மாதம்.

**இந்து இலக்கியக் கழகம்**

<u>வெளியிடுவது:</u> அருளாதி சங்கராச்சாரியார் பீடம்.

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை


1. வேண்டுகோள்.

2. முதல் பதிப்பித்தோரின் கருத்துரை.

3. இரண்டாம் பதிப்புரை.

4. பெரியார் ஈ.வெ.ராவை கௌரவத் தலைவராக இ.ம.இ.க்கு ஏற்றல்.

5. ஓர் இந்துமத விளக்கம் - திருமுருக கிருபானந்த வாரியாருக்கு மறுப்பும் விளக்கமும்.

6. பூசைமொழி.

7. அருட்பணி விரிவாக்கத் திட்ட உறுதிமொழி.

8. சுருக்க விளக்கக் குறிப்புகள்.


## இந்து வேத தேவ விளக்கச் சிந்தனைகளில் சில...

இந்து மதத்தில் மனிதர்கள் கடவுள்களாகவே மாறுகின்றார்கள்.

இந்து மதத்தில் கடவுள்கள் மனிதர்களாக வருகின்றார்கள், பிறக்கின்றார்கள், வாழுகின்றார்கள்.

இந்து மதக் கடவுள்கள் மனித வாழ்க்கையையே வாழுகின்றார்கள்.

இந்து மதக் கடவுள்கள் நோய்க்கு மருந்தும், பசிக்கு விருந்தும் வழங்குகின்றார்கள்.

இந்து மதக் கடவுள்கள் தாயாக, தந்தையாக, குருவாக, தோழனாக, தொண்டனாக, மகனாக, ... ... ... நேரில் வந்து உதவுகின்றார்கள்.

# வேண்டுகோள்

இந்து மதத்தின் உயரிய கருத்துக்களையும், அதில் இரண்டறக் கலந்து விட்ட *பொய்யான ஹிந்துமதக்* கருத்துக்களையும் நாடெங்கும் கதையாக சொல்பவர்கள், சொற்பொழிவாகச் சொல்பவர்கள், கூத்துக்களாக நடிப்பவர்கள், வில்லுப்பாடலாக கூறுகின்றவர்கள், இயலிசை நாடகமாக்கி செயலாக்கி வருகின்றவர்கள், நாட்டியமாக்கி நடனமாடி வருகின்றவர்கள் இன்றும் உள்ளனர்.

சமயக் காவியங்களை இலக்கியங்களாக, வரலாற்று நூல்களாக, ஆராய்ச்சிக் கட்டுரைகளாக, .... தீட்டிடும் ஆசிரியர்கள் உள்ளனர். அவர்களின் செய்திக் குரல்களுக்கு வடிவம் தரும் முயற்சியில் செய்தியேடுகளும், திரைப்படங்களும், வானொலியும், தொலைக்காட்சிகளும் முன்னணியில் நிற்கின்றன. புரவலப் பண்போடு ஆன்மீக உணர்வுகளை மரபாக வளர்க்கும் பெரியோர்கள், ஆன்றோர்கள், சான்றோர்கள், செல்வந்தர்கள், பாவலர்கள், நாவலர்கள், சபைகள், மன்றங்கள் ஏராளமாக உள்ளன. நாயன்மார், ஆழ்வார், அடிகளார், தொண்டர், ... பெயர்களில் குருபூசையும்; ஆலயங்களில் தவறாமல் பூசைகளும், விழாக்களும் நடைபெறுகின்றன.

இருந்தும் அருளை அனுபவப் பொருளாக, அருளுலக உண்மைகளைத் தெளிவோடும், பகுத்தறிவுப் போக்கோடும், விஞ்ஞானச் சூழலோடும் வழங்கும் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் கூற்றுக்களை, எழுத்துக்களை, வாசகங்களை உணராமலும்; இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் தத்துவங்களை அறியாமலும் இருப்பது இனியாவது, இந்நூலைப் படித்த பிறகாவது மாறட்டும்.

**- பிறமாச்சாரியார்.**



# முதல் பதிப்பித்தோர் கருத்துரை

சித்தர் நெறி ஆர்வலர்களும், இந்து மறுமலர்ச்சி இயக்க உறுப்பினர்களும், அருட்பணி விரிவாக்கத் திட்ட உறுப்பினர்களும்; கிருபானந்த வாரியாரின் தவறான கருத்துக்குக் குருதேவர் வழங்கிய பதிலை எந்த ஏடும் வெளியிட முன் வராததால்; இந்த அறிக்கையை அச்சிட்டு நாடெங்கும் வழங்க நேரிட்டது.

தமிழைத் தாழ்த்தியும், பழித்தும் கூறுகின்ற கிருபானந்த வாரியாரின் பேட்டியை வெளியிட தமிழில் ஏடுகள் இருக்கின்றன. ஆனால், தமிழின உரிமையையும், பெருமையையும், பேராற்றலையும், பழம்பெரும் வரலாற்றையும்,.... மிகத் தெளிவாகச் சான்றுகளுடனும் ஊன்றுகளுடனும் எடுத்துக் கூறுகின்ற குருதேவரின் கருத்துக்களை வெளியிட நாளேடுகளோ! வார ஏடுகளோ! பிற பதிப்பகங்களோ!.... முன் வரவில்லை என்பதால்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தினரும் **(இ.ம.இ.)**, அருட்பணி விரிவாக்கத் திட்டத்தினரும் **(அ.வி.தி.)**, சித்தர்நெறி ஆர்வலர்களும், ஆதரவாளர்களும் தமிழுக்கு

ஏற்பட்டுள்ள பழிநிலையை, அழிநிலையை விளக்கிப் பணியாற்ற முன் வந்துள்ளோம்.

தமிழுக்குத் தமிழகத்திலேயே இப்படிப்பட்ட ‘இகழ்ச்சி நிலைகள்’, ‘தாழ்ச்சி நிலைகள்’, ‘வீழ்ச்சி நிலைகள்’ .... மிகுந்திருப்பதை உண்மையான தமிழ்ப் பற்று உள்ளவர்களாவது உணர வேண்டும்.

தன்னம்பிக்கையும், தன்மான உணர்வும் உடைய உண்மையான தமிழர்களே! விழிச்சி பெறுங்கள்! எழிச்சி பெறுங்கள்! தமிழ் காக்க எங்களோடு செயல்பட வாருங்கள்! வாருங்கள்! வாருங்கள்! என்ற அறைகூவலை இந்த அறிக்கை வாயிலாக விடுக்கின்றோம்.

அந்தந்த வட்டாரத்தார் வசதி வாய்ப்புக்களுக்கேற்ப இந்த அறிக்கையைச் சில ஆயிரம் நகல்களாவது அச்சடித்துப் படித்தவர்க்கும், படிக்கின்றவர்க்கும் வழங்கிப் பைந்தமிழ் காக்கும் பணியினைச் சிறப்பியுங்கள். ஏனெனில்.....

“தமிழினத் தாழ்ச்சியே தமிழின வீழ்ச்சி!”
“தமிழின வீழ்ச்சியே இந்துமத வீழ்ச்சி!”
“தமிழுணர்ச்சியே இந்துமதச் செழிச்சி!”
“தமிழே இந்தியப் பண்பாட்டுக்கும் நாகரீகத்துக்கும் உயிர்!”
“தமிழே இந்திய வரலாற்றுக்கு ஊன்று, சான்று!”

எனவே, **“தமிழனே தமிழைப் பழிக்கும் இழிநிலையை <u>மாற்றப் போராடும் உணர்வு</u> தழைக்க உழைப்போம்! வாரீர்! வாரீர்! வாரீர்!”** என்று வேண்டுகிறோம்.

தமிழைச் சொல்லியே வாழ்ந்த, வளர்ந்த, வளரும், வாழும் கழகங்களும், தனி மனிதர்களும், பிற அமைப்புகளும் இருக்கின்ற நமது செந்தமிழ் நாட்டில் யாருமே தமிழ் இழித்துரைக்கப் பட்டதற்குக் கொதித்து எழவில்லை. எவரும் பொறுப்பாகப்

பதிலுரைக்கவில்லை. மேலும், 'தமிழ் வாழ்க! சைவம் வாழ்க!' என்ற முழக்கத்தையே உள்ளீடாகக் கொண்ட சைவ மடங்களும், பீடங்களும் உள்ள தெய்வத் தமிழ் நாட்டில் யாருமே தமிழின மானம் காக்க உரிமைக் குரல் எழுப்ப வில்லை.

இந்த மோசமான, மோசடியான, நாச காரக் காலக்கட்டத்தில்தான் இ.ம.இ.யும், அ.வி.தி.யும், சித்தர் நெறி ஆர்வலர்களும், ஆதரவாளர்களும் தமிழின உரிமையையும், பெருமையையும் காக்க முன்வந்துள்ளனர் என்பதை இனியாவது தமிழகத்து மக்கள் புரிந்து சிந்தித்துச் செயல்பட வேண்டும் என்ற வேண்டுகோள் விடுக்கப் படுகின்றது.

இங்ஙனம்

**சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள்.**



**சேரநாட்டுச் செந்தமிழராகிய காலடி ஆதிசங்கராச்சாரியாரைத் தயாரித்த 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, தஞ்சைப் பெரியகோயிலைக் கட்டிய ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள்.**



**64வது நாயனர் சொல்லடி நாயனர் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள்**

# இரண்டாம் பதிப்புரை

இந்த தலைப்பில் வெளிவந்த ஒரு சிறிய புத்தக வடிவ அறிக்கை நெடிய இடைவெளிக்குப் பிறகு மீண்டும் பதிப்பிக்கப் படுகின்றது. இதற்குக் காரணம் பெரும்பாலான முதல் பதிப்புக்கள் இனமாகவே வழங்கப்பட்டு விட்டன. எனவேதான், இயக்கத்தால் இரண்டாவது பதிப்பை உடனே வெளியிட முடியவில்லை.

இந்து மதத்தின் கருவறையாக உள்ள தமிழகத்தில், இந்து மதத்தின் மூல மொழியாக உள்ள தமிழ் மொழியில், இந்து மதத்தின் தத்துவ வாரிசுகளான தமிழர்களுக்கிடையில், இந்து மதத்தின் தொட்டிலான 48 வகை வழிபாட்டு நிலையங்களும் உள்ள தமிழ் மண்ணில், இந்து மதத்தின் 48 வகையான அருளாளர்களும், அருளாளிகளும், அருளாடு நாயகங்களும், மருளாளர்களும், மருளாளிகளும், மருளாடு நாயகங்களும் வாழையடி வாழையென தோன்றிக் கொண்டே இருக்கக் கூடிய தமிழ்ச் சமுதாயத்தில்தான் **இந்து மத விளக்கம்** என்ற ஒரு தலைப்பில் நூல் ஒன்று எழுதி அச்சிட்டு, விற்க முடியாமல் இனமாகத் தர வேண்டி நேரிட்டது.

இப்படிப்பட்ட அவல நிலைகள், கேவல நிலைகள் ஏன் உருவாகின? எப்படி உருவாகின? எதற்காக உருவாகின? எவ்வளவு காலமாக உருவாகி இருக்கின்றன? என்ற வினாக்களுக்கு விடையாக ஆயிரமாயிரம் பக்கங்களில் எழுதிக் குவிக்கப் பட்டு இருக்கின்றன; பல்லாயிரக் கணக்கில் அடியான்களும், அடியாள்களும், அடியார்களும் உருவாக்கப்பட்டு இருக்கின்றனர். நாட்டின் பல பகுதிகளில் அருளை அநுபவப் பொருளாக வழங்கும் அருட்பணி விரிவாக்கத் திட்ட நிலையங்கள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. வாரத்தின் ஏழு நாட்களும் ஆங்காங்கே அருளுரைகள், அறிவுரைகள், அருளார்ந்த அறிவுரைகள், அறிவார்ந்த அருளுரைகள் வழங்கப் படுகின்றன. அவ்வப்போது அறிக்கைகளும், அறிவிக்கைகளும், சிறிய, பெரிய நூல்களும் அச்சிட்டு வழங்கப்படுவதோடு எங்களது கொள்கை விளக்க முழக்க ஏடாக மாதம் ஒரு முறை 'குருதேவர்' அறிக்கை அச்சிடப்பட்டு எங்களுடைய இயக்க உறுப்பினர்களுக்கு பயிற்சிப் பாட நூலாக வழங்கப்படுகின்றன.

இப்படியெல்லாம் இந்து மத விழிச்சிக்கும், எழிச்சிக்கும், கிளர்ச்சிமிகு பல முயற்சிகள் செய்யப்பட்டும்; இந்துமதத்தின் தலைவர்களாக, பீடாதிபதிகளாக, சன்னிதானங்களாக, பூசாறிகளாக, அருளாளர்களாக, சொற்பொழிவாளர்களாக, பத்தர்களாக, .... இருக்கக் கூடியவர்கள் இடையில் ஊசிமுனையளவு கூட மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை. ஆனால், இந்து மதத்தில் உள்ள சடங்குகளும், சாத்திறங்களும், பழக்க வழக்கங்களும், திருநாள்களும், திருவிழாக்களும் மிகமிகச் சிறப்பாகவும், உயிர்த் துடிப்பாகவும் வாழுகின்றன. இந்து மதத்தின் பெயரால் பல கட்சிகள் இருக்கின்றன. இந்து மதத்துக்காக அதிக விலையில் பல ஏடுகள் வருகின்றன. இந்து மதத்துக்கும், மற்றைய மதங்களுக்கும் சண்டை மூளும் வண்ணம் பரபரப்பான விரிவுரைகள், சொற்பொழிவுகள் நாடெங்கும் நிகழ்ந்து வருகின்றன. இதுதான்

புரிந்து கொள்ள முடியாத உண்மையாக இருந்தது! இருந்தது! இருந்தது!

இப்பொழுதுதான் இந்த மந்த நிலைகளை, மயக்க கலக்க நிலைகளை இனியும் வளர விடக் கூடாது என்று உலகம் முழுவதும் உள்ள தலைவர்களில் பலர் வீரத்தோடும், தீரத்தோடும் புறப்பட்டு எங்களுக்கு நேரிடையாகப் பேராதரவும், பிற உதவிகளும் செய்ய முன் வந்துள்ளார்கள். எனவேதான், நாங்கள் நாடெங்கும் எங்களின் இயக்கச் சொற்பொழிவுகளையும், புத்தக விற்பனைகளையும், 13 வகையான நிறுவனங்களுக்குக் கிளை அமைப்புக்கள் உருவாக்குவதையும் செயலாக்க ஆரம்பித்துள்ளோம். இதன் முதல் அங்கமாகத்தான் இந்த இரண்டாம் பதிப்பு வெளி வருகின்றது.

இடைக்காலத்தில் தமிழினத்துக்கென்று ஒரு சாபக் கேடு ஏற்பட்டு விட்டது. அதாவது <u>தமிழைப் பற்றித் தெரியாதவனே</u> தமிழ்மொழி பற்றிய நிறுவனங்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும், முயற்சிகளுக்கும் தலைவனாக இருப்பது என்பதும்; <u>தமிழின உணர்வோ, பாரம்பரிய வீரியமோ, பண்பாட்டுத் தரமோ, நாகரிகத் திறமோ இல்லாதவன்தான்</u> தமிழினம் பற்றிய நிறுவனங்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும், முயற்சிகளுக்கும் தலைவனாக இருப்பது என்பதும்; <u>தமிழ் நாட்டுக் கல்வித் துறை, கலைத் துறை, அறிவியல் துறை, அரசியல் துறை, சமயத் துறை, சமுதாயத் துறை முதலிய அனைத்துத் துறைகளிலுமே அந்தத் துறையைப் பற்றிய அறிவோ, ஆற்றலோ, அநுபவமோ, பயிற்சியோ, முயற்சியோ இல்லாதவர்கள்தான்</u> அந்தத் துறைகள் பற்றிய நிறுவனங்கள், நிகழ்ச்சிகள், முயற்சிகள் முதலியவற்றுக்கு தலைவர்களாக இருக்கின்றார்கள் என்பதும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

இப்படிப்பட்ட சாபக் கேடுகளையும், பாவப்பட்ட நிலைகளையும் முழுமையாக அகற்றுவது என்பது வாழையடி வாழையாக வந்திருக்கும்

அருளுலக வாரிசுகளால்தான் முடியும்! முடியும்! முடியும்! எனவேதான், அருளுலக இருள்களை அகற்ற, இருட்டடிப்புக்களை விளக்கிட, சூழ்ச்சிகளை முறியடித்திட, ஏமாற்றுக்களைத் தவிர்த்திட அடிப்படையான தத்துவ ரீதியான கொள்கை அடிப்படையிலான நேரடி முயற்சியின் முதல் அங்கமே இந்நூலின் மறுபதிப்பு.

தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் '**இந்து மதத்தின் மூலம்தான்** தமிழர்களை தாழ்ச்சி நிலைகளிலிருந்து உயர்ச்சி நிலை அடையச் செய்ய முடியும்; தூக்க நிலைகளிலிருந்து விழிச்சி அடையச் செய்ய முடியும்; அடிமை உணர்வும், இனப் பற்றுணர்வும், இன உரிமையுணர்வும், மொழிப்பற்று உணர்வும் அடைந்திடச் செய்ய முடியும்' என்று கண்டுபிடித்தார். அதனால்தான் இந்து மத வரலாறுகளையும், தத்துவங்களையும், நடைமுறைகளையும், நம்பிக்கைகளையும் கடுமையாக விமரிசனம் செய்து அவற்றைத் தூய்மைப் படுத்தவும், வாய்மைப் படுத்தவும் முயற்சி செய்தார். இதனால் இவர் 63 நாயன்மார்களும், 12 ஆழ்வார்களும், தாயுமானவரும், மௌனகுருவும், பட்டினத்தாரும், அருணகிரியாரும், பத்திரகிரியாரும், வள்ளலாரும் .... உருவாக்க முடியாத மத எழுச்சி உணர்வையும், விழிச்சி உணர்வையும் உருவாக்கினார்! உருவாக்கினார்! உருவாக்கினார்!

அந்த நிலையில்தான் பிறமண்ணினரான பிருமணர்கள் எனப்படும் வடஆரியர்கள் தங்களுடைய மதமான வேத மதத்தையும், சமசுக்கிருதத்தையும் தமிழர்களுடைய **மெய்யான இந்துமத**த்தில் புகுத்தி தாங்கள் உருவாக்கிய '*ஹிந்து மதம்*' என்ற *பொய்யான ஹிந்துமதத்தை* பெரியார் மூலம் தமிழர்களும், உலகத்தவர்களும் அடையாளம் கண்டு கொண்டு விடுவார்கள் என்று அஞ்சினார்கள். எனவேதான், பெரியாரை அவசர அவசியமாக ஒரு நாத்திகர், மத வெறுப்பாளர், கடவுள் மறுப்பாளர் .... என்றெல்லாம் குற்றம் கூறி,

குறை கூறி இந்துக்களிடம் செல்வாக்குப் பெற முடியாமல் செய்து விட்டனர்.

இவ்வாறு, பதினெண்சித்தர்களால் 43,73,086 ஆண்டுகளுக்கு முன்னால் (*1985இல்*) கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டத்தில் தங்களின் தாய்மொழியான அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியான தமிழில் இம்மண்ணின் ஈசர்களான மணீசர்களுக்கு வழங்கப்பட்ட மதமான இந்து மதத்தை அதனுடைய மூலவர்களாகவும், காவலர்களாகவும் உள்ள தமிழர்களே முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாமல் செய்து விட்டனர், சூழ்ச்சிக் காரர்களான வடஆரியர்கள்.

அதாவது **இந்துமதச் சீர்திருத்தச் சிங்கமான பெரியார் ஈ.வெ.ரா.வை *'அவர் ஒரு நாத்திகர்'* என்ற கூண்டுக்குள் அடைத்து விட்டார்கள்**. இந்தச் சோக வரலாற்றை விளக்கிச் சொல்லித்தான் சுயமரியாதை இயக்கத்தின் தொடர்ச்சியை; நீதிக் கட்சியின் தொடர்ச்சியை; பகுத்தறிவுக் கட்சியின் தொடர்ச்சியை; தமிழ்ச் சமுதாயச் சீர்திருத்தப் பணியின் தொடர்ச்சியை; சமசுக்கிருதம், இந்தி, பாலி, பிராகிருதம், தேவநாகரி, .... முதலிய மொழிகளை எதிர்த்துத் தமிழ்மொழியின் உரிமையைப் பாதுகாக்கும் முயற்சியின் தொடர்ச்சியை; அண்டப் புளுகுகளும், ஆபாசக் கற்பனைக் கதைகளும், சூழ்ச்சி மிக்க சுரண்டல் நடைமுறைகளும், சாதி மத வெறிகளை வளர்க்கும் கருத்துக்களும், பிருமணத் தலைமைகளும், வழிகாட்டல்களும் முழுமையாக அகற்றப்பட்டு இந்து மதம் தூய்மையும், வாய்மையும், பயனும் அடையுமாறு செய்ய எடுக்கப் பட்ட முயற்சிகளின் தொடர்ச்சியை தந்தை பெரியார் ஈ.வெ.ரா.வைக் கௌரவத் தலைவராகக் கொண்ட **இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின்** செயல் திட்டங்கள் உருவாக்கி உள்ளன.

அதாவது, பெரியார் ஈ.வெ.ரா.வின் வாழ்வியல்களையும், சாதனைகளையும், போதனைகளையும் அடிப்படையாகக் கொண்டுதான்

இந்துமதம், தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு என்ற அனைத்தையும் பாதுகாக்க முடியும்! பாதுகாக்க முடியும்! பாதுகாக்க முடியும்! இப்பேருண்மையினை உணர்வதிலும், உணர்த்துவதிலும்தான் இந்துமத வளவளர்ச்சியும், தமிழின ஒற்றுமையும், தமிழின உரிமை மீட்சியும் வடிவப்படும், வாழ்வு பெறும், பெருமை பெறும்.

இன்றைக்குப் பிறமண்ணினரான பிருமணர்கள் தங்களுடைய *பொய்யான ஹிந்துமதம்*தான் தமிழர்களின் **மெய்யான இந்துமதம்** என்ற மாயைகளை, மயக்கங்களை, குழப்ப நிலைகளை வளர்த்து வருகிறார்கள்! வளர்த்து வருகிறார்கள்! வளர்த்து வருகிறார்கள்! இவர்கள் தங்களுடைய பிடிப்பில் இந்துமதத் தலைமைகளும், தத்துவங்களும், புராண இதிகாசங்களும், வரலாறுகளும், பூசைமுறைகளும், சடங்கியல்களும் என்றென்றும் இருந்திட்டால்தான் தங்களுக்கு இந்தியாவில் வாழ்வுண்டு; தங்களுக்கு இந்திய அரசியலில் உரிமையும் பெருமையும் உண்டு; தங்களுக்கு இந்தியச் சமுதாயத்தில் மேட்டுக் குடியாகவே இருக்கின்ற உயிர்நிலையும், உயர்நிலையும், ஆட்சிநிலையும் நிலைத்திடும்! நிலைத்திடும்! நிலைத்திடும்! என்பதைத் தெளிவாகப் புரிந்திருக்கின்றார்கள்.

எனவேதான், இவர்கள் எதையும் காணிக்கையாகவோ, பலியாகவோ, படையல்களாகவோ, விலையாகவோ, கூலியாகவோ கொடுத்து இந்துக்களிலேயே சில துரோகிகளையும், விரோதிகளையும், எதிரிகளையும், கங்காணிகளையும் உருவாக்கி; தொடர்ந்து இந்துமதம் தங்களுடைய பிடியில் இருக்குமாறு செய்து வருகின்றார்கள். இப்படி இவர்கள் உருவாக்கியவர்களே இந்துமதத்தின் புகழ்மிக்க சொற்பொழிவாளர்களாக, விரிவுரையாளர்களாக வாழ்கின்றார்கள். இதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலே குறிப்பிட்டது போல் அப்பாவியான சிலர், பேராசைக்காரர்களான சிலர், ஏமாளியான சிலர், <u>இந்துமதம்</u>

<u>தமிழர்களுடையது</u> என்பதையும்; <u>இந்துமதத்தில் உள்ள அனைத்துக் கருத்து விளக்கச் சொற்களும் (Technical Terms), உயிர்நாடியான அருள்மொழிகளும், மந்திரம் என்ற சொல்லால் குறிக்கும் அனைத்துச் சடங்குகளும், பிற இலக்கியங்களும் தூய உயர் செந்தமிழ்ச் சொற்களிலேயே இருக்கின்றன</u> என்ற பேருண்மையையும் மறைத்தும், குறைத்தும், மறுத்தும், வெறுத்தும், திருத்தியும் கூறித் திரிந்து வருகின்றார்கள்.

இவர்களில் ஒருவரே மதிப்புக்குரிய பெரியவர் கிருபானந்த வாரியார். இவர் தமிழர் என்பதாலும்; இவருக்குச் சரியாகத் தமிழ் தெரியாது என்பதாலும்; இவருக்கு இந்து மதத்தின் பத்தி நிலை, சத்தி நிலை, சித்தி நிலை, முத்தி நிலை எதுவுமே தெரியாது என்பதாலும்; இவர் தந்தை பெரியாரின் பகுத்தறிவுப் பணிக்கு ஈடு கொடுக்க முடியாமல் வடஆரியர்களிடம் அடைக்கலம் புகுந்தவர் என்பதாலும்; இவர் தனது நன்றிக் கடமை உணர்ச்சியாலே வடஆரிய ஆதரவாளராக வாழுகின்றார் என்பதாலும்; .... இவர் மீது கோபப்படாமல் இவருக்காக வருந்தி, இவரைத் திருத்தும் முயற்சியில் ஈடுபட்டே இந்த நூல் வெளியிடப் பட்டது. மீண்டும் வெளியிடப் படுகின்றது. இவரும் இவரைப் போன்றோரும் திருந்த வேண்டும்.

<u>வடஆரியர்கள் தமிழ் மொழிச் சொற்களை, சமசுக்கிருத மொழி ஒலிநயத்துக்கு உரியவைகளாகத் திரித்து, புதிய சொற்களை உருவாக்கியதின் மூலம்தான்</u> நிலையான வெற்றியைப் பெற்று விட்டார்கள். இந்தப் பேருண்மையைப் புரிந்து கொள்வதிலும், புரிய வைப்பதிலும்தான் இந்து மத மறுமலர்ச்சி இருக்கின்றது. <u>இந்து மத மறுமலர்ச்சியில்தான் தமிழினமும்; தமிழினத்தின் தன்மானமும், இனமானமும், ஒற்றுமையும், மொழி உணர்வும், மொழி உரிமை மீட்சியும் அடங்கி இருக்கின்றன</u>.

எனவே, ஒரு சில சமசுக்கிருதத் திரிபு பெற்ற சொற்களை மட்டும் சுட்டிக் காட்டி இம்முன்னுரையை முடிக்கின்றோம். இந்துமத மூலவர்களான, காவலர்களான தமிழர்களே! பொறுப்போடும், பொறுமையோடும் சிந்தியுங்கள்! விழிச்சி பெறுங்கள்! வளர்ச்சிக்குரிய கிளர்ச்சி பெறுங்கள்! மலர்ச்சிக்குரிய செழுச்சி பெறுங்கள்.

இந்து → ஹிந்து

சாத்திறம் → சாஸ்த்ரம்

சீவன் → சிவன் → ஸிவன் → ஜீவன்

பிறமண் → பிரமன் → பிரம்மா → பிர்மா

காயந்திரி → காயத்ரீ

திருமால் → மஹாவிஷ்ணு

கலைமகள் → சரஸ்வதி

திருமகள் → லக்ஷ்மி

பூசை (பூ+செய்) → பூஜை

அருட்சினை → அர்ச்சனை

ஐந்திறம் → பஞ்சாங்கம்

அங்கவியல் → சாமுத்திரிகாலக்ஷணம்

நெய்வேத்தியம் -> நைவேத்யம்



# பெரியார் ஈ.வெ.ரா.வை கௌரவத் தலைவராக இ.ம.இ.க்கு ஏற்றல்

1. நாயன்மார்களும், ஆழ்வார்களும் பெற்றுத் தர முடியாத உயர்ச்சியை இந்து மதத்துக்கு பெரியார் ஈ.வெ.ரா. ஈட்டித் தந்தார் என்பதை உணர முற்படுங்கள்.

2. பெரியார் ஈ.வெ.ரா.வின் வழியில் இந்துமத மறுமலர்ச்சிப் பணிகள் நிகழ்ந்தால்தான் மதமடமைகள், சுரண்டல்கள், ஆபாசங்கள், பயனற்றவைகள், தவறுகள் முதலியவை அகற்றப்படும். பின்னர்தான் பதினெண்சித்தர்கள் படைத்த சித்தர் நெறியெனும் மெய்யான இந்து மதத்தின் பயன்கள் உலகுக்குத் தெரியும்.

3. “**பதினெண்சித்தர்கள் படைத்த பகுத்தறிவு நிறை இந்து மதம்** பார்ப்பனரால் பாழ் பட்டது” என்ற பேருண்மையைப் பறை

சாற்றிய பெரியாரைப் புரிந்து செயல்படுவதுதான் தமிழ்மொழி, இன, பண்பாட்டு, நாகரீக விடுதலைகள் நல்கும்! நல்கும்!! நல்கும்!!!

4. பெரியார் ஈ.வெ.ரா.தான் "சமசுக்கிருத மொழி இந்து மத பத்திநெறி, சத்திநெறி, சித்திநெறி, முத்திநெறி, ... முதலிய அனைத்துக்கும் சாவுமணி அடித்துவிட்டது" என்பதனைத் **"தமிழ்மொழியில்தான் அருட்சினை செய்ய வேண்டும்"** என்ற கருத்தால் தெளிவாக விளக்கினார்.

5. பெரியார், **"உண்மையான இந்து மதத்தின் செழுச்சியால்தான் இன விடுதலைகள், மொழி விடுதலைகள், பண்பாட்டு உரிமைகள், பொதுவுடமைகள் விளைந்திடும்"** என்றதை ஆராய்ந்து உணர முற்படுங்கள்.

தவத்திரு கைவல்ய சுவாமிகளும், அருள்மிகு கடலூர் ஞானியார் சுவாமிகளும், சித்தர் காகபுசுண்டரும், மறைமலை அடிகளாரும், மெய்வழிச்சாலை ஆண்டவரும், பரஞ்சோதி மகானும், பெரியகுளம் மௌனச் சாமியாரும், வடுகப்பட்டி தாத்தா சாமியாரும், திருவையாறு நிர்வாண அடிகளாரும், தஞ்சை வடவாற்றங்கரை மடத்தடிகளும், திருவண்ணாமலை பலாக்காக் காட்டு கோவணச் சாமியும், குன்றக்குடி அடிகளாரும் ... இந்து மத மறுமலர்ச்சிப் பணிகளைப் பகுத்தறிவுப் பகலவன், தந்தை பெரியார், ஈ.வெ.ரா.வால்தான் செய்ய முடியும் என்ற பேருண்மையை உணர்ந்து தங்களின் பேராதரவை வழங்கினார்கள்.

எனவே, இயக்கத்திற்கு தந்தை பெரியார் ஈ.வெ.ரா அவர்களை கௌரவத் தலைவராக ஏற்கிறோம்.





ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்

வழங்கும்

# ஓர் இந்து மத விளக்கம்

(இரண்டாம் பதிப்பு - 1985)

## திருமுருக கிருபானந்த வாரியாருக்கு மறுப்பும் விளக்கமும்

***1983 'இந்துமதம் அழைக்கிறது' அக்டோபர் மாத இதழில் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் தமிழைப் பற்றியும், இந்து மதத்தைப் பற்றியும் தந்த தவறான கருத்துக்களுக்கு மறுப்பும் விளக்கமும்:-***

இந்து மதம் பற்றித் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் கூறியுள்ள தவறான கருத்துக்கு, இந்து மறுமலர்ச்சி இயக்கத் தலைவர் என்ற முறையிலும்; தமிழைத் தாழ்த்திக் கூறியதற்கு, தமிழை இம்மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண்சித்தர்களின் வாரிசாக உள்ள யாம் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி என்ற முறையிலும் தனித்தனிப் பதில்கள் வழங்குகிறோம். 'இந்துமதம்

அழைக்கிறது' இதழின் ஆசிரியரின் விருப்பப்படி இவற்றை வெளியிடலாம். யாவும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே!

'இந்து' - என்ற சொல்லுக்கு பதில் பகர்கையில் கிருபானந்த வாரியார் அவர்கள் *"ஹிம் + தும் => ஹிம்சைகளை, அதாவது பிறரின் துன்பங்களைக் கண்டு + தும், அதாவது துக்கப் படுகின்றவன் = இந்து ஆவான்"* என்று கூறியுள்ளார்.

நெடுநாள் சமயப் பணி ஆற்றும் பெரியவரே; இந்து மத வரலாறுகளையும், தத்துவங்களையும் ஆராயாமல் பாமர மக்களுக்குக் காசுக்காகக் கதை சொல்லும் தொழிலாகவே சமயப் பணியைச் செய்து வருவது வருந்தத் தக்கது. இவரைப் போன்று சமயப் பயிற்சியோ! முயற்சியோ! முறையான ஞானமோ! ... இல்லாதவர்களால்தான் இந்து மதம் இன்றுள்ள சிக்கலான நிலைகளை; மறுப்புக்கும், வெறுப்புக்கும், எதிர்ப்புக்கும் உரிய நிலைகளை பெற்றிட்டது.

இம் மண்ணுலகம் தோன்றி ஐந்நூறு (500) கோடி ஆண்டுகளாகின்றன; இதற்கு முன்னரே விண்வெளியில் உள்ள அண்டங்களிலும், பேரண்டங்களிலும் (Universe) பதினெண்சித்தர்களால் தோற்றுவிக்கப் பட்ட இந்து மதம் இருந்து வருகின்றது.

நெருப்பாக, பனியாக, நீராக முன்னூறு கோடியாண்டுகளும், கல் தோன்றி ஒரு நூறு கோடி ஆண்டுகள் கழித்தே மண்ணும், உயிர்களும் (அருவங்களும்), பயிரினங்களும், உயிரினங்களும் (உருவங்கள்) தோன்றின. மனித இனம் தோன்றி மூன்று உகங்கள் முடிந்து நான்காவது உகம் நடக்கின்றது.

| | | | |
|---|---|---|---|
| (1) | கிரேதா யுகம் | 17,28,080 | ஆண்டுகள் |
| (2) | திரேதா யுகம் | 12,90,000 | ஆண்டுகள் |
| (3) | துவாபர யுகம் | 8,64,000 | ஆண்டுகள் |
| (4) | கலி யுகம் | 4,32,000 | ஆண்டுகள் |
| | | 43,14,080 | ஆண்டுகள் |

ஆக மனிதன் பண்பட்ட நிலையில் இம்மண்ணுலகில் வாழும் காலமே இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், மனிதன் பண்படுவதற்கு முன்னால் வந்த சித்தர்கள் அருளுலக ஊற்றுக்களைக் கண்டுபிடித்து இந்து மத நெறிகளை வகுத்தனர். அப்போதே இந்து மதம் தோன்றியது. நாடோடியாக மனிதன், மணீசனாக வாழ்ந்த அந்தக் காலமே (4,85,920 ஆண்டுகள்) 'அனாதிக் காலம்' எனப்படும்.

இந்த உலகில் மண் தோன்றுமுன் கற்பாறைகள் மட்டுமே தோன்றியிருந்த காலத்தில் பதினெண்சித்தர்கள் எண்ணற்ற முறை இங்கு வந்து தங்கி ஆய்வுகள் நிகழ்த்தி இந்த உலகம் (48 இலட்சம்) நாற்பத்தெட்டு நூறாயிரம் ஆண்டுகள் கழித்து அழியும் என்று முடிவு செய்தனர். மானுட இனம் அழிந்த பிறகு இந்த உலகம் இருண்டு முழுமையாகச் சிதைய (ஐந்து இலட்சம்) ஐந்து நூறாயிரம் ஆண்டுகள் ஆகிடும். எனவே, பதினெண்சித்தர்கள் இந்த உலக அருவங்கள், உருவங்கள், அருவுருவங்கள் அனைத்தும் உய்யும் பொருட்டு நாற்பத்தெட்டு எண்ணிக்கைகளை உடைய பல நிலைகளைக் கொண்ட இந்து மதத்தைத் தங்களின் தாய்மொழியான தமிழ்மொழியில் கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலேயே படைக்க ஆரம்பித்திட்டார்கள்.

'**<u>இந்து</u>**' என்ற சொல்லை **'விந்து'**, **'உயிரணு'**, **'உயிரின் கரு'**, **'உயிரின் ஆரம்பமும் முடிவும்'**, **'ஒளி'**, **'ஒலி'**, **'வலிமை'**, **'வளம்'**, **'அழகு'**, **'இளமை'**, **'இனிமை'**, **'அன்பு'**, **'அமைதி'**, **'நிறைவு'**, **'நிம்மதி'**, **'ஒற்றுமை'**, **'உறவு'**, **'உரிமை'**, **'பற்று'**, **'பாசம்'**, **'நேர்மை'**, **'வாய்மை'**, **'தூய்மை'**, **'மெய்ம்மை'**, **'துய்ப்பு'**, **'பத்தி'**, **'சத்தி'**, **'சித்தி'**, **'முத்தி'**, **'நிலைப்பேறு'**, **'பிறப்பிறப்பற்ற பெருநிலை'**, **'தவம்'**, **'ஞானம்'**, ... எனும் நாற்பத்தெட்டு வகையான பொருளுணர்வைக் குறிக்கும் சொல்லாகவே படைத்தனர். எனவேதான், இந்து மதம் உலக மானுட இனத்தைப் பண்படுத்திடும் வழியாய், வழிகாட்டியாய், வழித்துணையாய், வழிப்பயனாய் என்றென்றும் இருந்து வருகின்றது.

இந்த உலகை ஒன்பது கோள்களும், பன்னிரண்டு இராசிகளும், இருபத்தியேழு விண்மீன்களும் (நட்சத்திரங்களும்) எனும் நாற்பத்தெட்டு (9 + 12 + 27 = 48) விண்ணுலகச் சத்திகளே ஆட்டிப் படைக்கின்றன. இவற்றிலிருந்து தப்பிக்கப் பரிகாரப் பூசைகளை விளக்குவதே இந்துமதம்.

இந்துக்களுக்கே இந்து மதத்தைப் பற்றி விளக்கியுரைக்க வேண்டிய அவசர அவசியச் சூழ்நிலைகளும், தேவைகளும் ஏற்பட்டு விட்டன. இன்னும் சொல்லப் போனால், தாய்ப்பசு கூடத் தனது கன்றினை அடையாளம் கண்டு கொள்ளக் கூடிய இயற்கையான உய்த்துணர்வு இருக்கும் போது; இந்துக்கள் மட்டும் தங்களின் மூலவர்களாக, காவலர்களாக, அருளுலக வாரிசுகளாக வாழையடி வாழையாக வாழ்ந்து வரும் தமிழர்களை, தமிழ் மொழியை, தமிழ்நாட்டை உய்த்துணர முடியாமல் போனது ஏன்? எவ்வாறு? எதனால்?

இம்மண்ணுலகில் விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்த மண்ணின் ஈசர்களான (ஈசர் = தலைவர்) 'மணீசர்களை'ப் பண்பாட்டுக்குரிய மனதைப் பெற்ற 'மனிதர்களாக' மாற்றியதுதான் இந்து மதம். இந்து மதம் பதினெண்சித்தர்களால் தங்களது தாய்மொழியான தமிழ்மொழியில் இன்றைக்கு (1985ஆம் ஆண்டில்) 43,73,086 ஆண்டுகளுக்கு முன்னால் இளமுறியாக் கண்டம் [இளமை மாறு மண் = The Immatured Soil] என்ற பெருநிலப் பரப்பில் படைக்கப் பட்டது.

தனிமனிதர், குடும்பம், சமூகம், அரசு என்ற நான்கு வகை நிலைகளுக்கும் **தேவையான கருத்துக்களை** 'வாக்கு', 'வாக்கியம்', 'வாசகம்' என்று மூன்று வகைகளாக 'இயல்', 'இசை', 'நாடகம்' என்ற முத்தமிழில் வழங்கியவர்களே பதினெண்சித்தர்கள்.

இந்து மதத்தைக் கருக்கள், குருக்கள், தருக்கள், திருக்கள் என்ற நான்கு நிலையினரே நாற்சுவர்க் கோட்டையாகக் காத்திடும்

மரபு தோற்றுவிக்கப் பட்டது. இவர்கள் 'நான்மறைகள்', 'நான்முறைகள்', 'நானெறிகள்', 'நான்வேதங்கள்' என்ற நான்கு பிரிவு கொண்ட நான்கு செயல்நிலைகளை வடிவமைப்புச் செய்தார்கள். இவற்றின் உயிர்நிலையாக 1. நேமம், 2. நியமம், 3. நிடதம், 4. நிட்டை என்ற நான்கும்; 1. சுருதி, 2. ஆரணம், 3. ஆகமம், 4. மீமாம்சை என்ற நான்கும் படைக்கப்பட்டன. இவை துணை, இணை [நேமம், துணை நேம, இணை நேமம்] என்ற இரு பிரிவுகளோடு ஒவ்வொன்றும் மூன்று வகையான உட்பிரிவினைப் பெற்றன.

மனிதர்கள் **மதத்தைச் செயலாக்கிட** 1. பூசை [பூ + செய்], 2. தவம், 3. வேள்வி, 4. சித்தம் என்று நான்கு பெரும் பிரிவுகளாக்கினர்.

இதன்படி **குருவழியாகப்** 1. பயிற்சி, 2. முயற்சி, 3. தேர்ச்சி, 4. முதிர்ச்சி என்ற நான்கு நிலைகளைக் கடக்கும் பாடத் திட்டம் வழங்கப்பட்டது. அதில் கல்வி கற்றவர்கள் 1. பத்தி, 2. சத்தி, 3. சித்தி, 4. முத்தி என்ற நான்கு வாழ்வியல் நிலைகளைப் பெறும் உறுதியும், வாய்ப்பும், வசதியும் உருவாக்கப்பட்டன.

பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும் இந்து மதத்தைச் செயலாக்கிட 1. 48 வகைச் சித்தர்கள், 2. 48 வகைக் கருப்புகள், 3. 48 வகை வழிபடு நிலையினர்கள், 4. 48 வகைக் கருவறை மூலவர்கள், 5. 48 வகை அருளாளர்கள், அருளாளிகள், அருளாடு நாயகங்கள், 6. 48 வகை மருளாளர்கள், மருளாளிகள், மருளாடு நாயகங்கள், 7. 48 வகை பதினெண்சித்தர் பீடாதிபதி வழி ஆச்சாரியார்கள், 8. 13 வகைக் கருவழி ஆச்சாரியார்கள், 9. 13 வகைக் குருவழி ஆச்சாரியார்கள் என்று ஒன்பது வகை **அருளுலக ஆட்சியாளர்களை** உருவாக்கினர்கள்.

இந்து மதத்தின் உயிரோட்டமாக **எண்வகை ஆச்சாரியார்கள்**, 1. ஈசுவராச்சாரியார், 2. ஆதி ஈசுவராச்சாரியார், 3. சிவாச்சாரியார்,

4. ஆதி சிவாச்சாரியார், 5. பரமாச்சாரியார், 6. ஆதி பரமாச்சாரியார், 7. சங்கராச்சாரியார், 8. ஆதி சங்கராச்சாரியார் உருவாக்கப் பட்டுள்ளனர்.

இவர்களெல்லாம் செயல்பட **'முத்தீ ஓம்பல்'** என்று 1. கந்தழி நிலை, 2. வள்ளி நிலை, 3. கொடி நிலை என்று மூன்று வகை வழிபாடும், **'ஐந்தீ வேட்டல்'** என்று 1. ஓமம், 2. ஓகம், 3. யாகம், 4. யக்ஞம், 5. வேள்வி என்று ஐந்து வகை வழிபாடும் படைக்கப் பட்டன.

கருவூரரின் பரம்பரையினரின் **அருளுலகப் <u>படைப்பாற்றலுக்கு</u>** உரியவையாக இரவில் மட்டும் கூறப்படும் 1. தந்திறம், 2. தந்திரம், 3. தந்தரம், 4. தாந்தரம், 5. தாந்தரீகம் என்பனவும்; காகபுசுண்டரின் பரம்பரையினரின் **அருளுலகக் <u>காப்பாற்றலுக்கு</u>** (போற்றிப் பேணிப் பாதுகாத்து வளர்த்தல்) உரிய பகலில் மட்டும் கூறக் கூடிய 1. மந்திறம், 2. மந்திரம், 3. மந்தரம், 4. மாந்தரம், 5. மாந்தரீகம் என்பனவும்; இருகாலத்தும் கூறக் கூடிய 1. எந்திறம், 2. எந்திரம், 3. எந்தரம், 4. ஏந்தரம், 5. ஏந்தரீகம் என்பனவும் இந்து மதத்தில் படைக்கப் பட்டு **'இந்து மதம் ஓர் அண்டபேரண்டமாளும் மதம்'** என்ற நிலையைப் பெற்றுள்ளது. மாறாத இளமையும், குன்றாத சுவையும், அமுதப் பண்புமுடைய **உயர்தனிச் செம்மொழியான தமிழ்மொழியே இந்த அண்ட பேரண்டமாளும் இந்து மதத்தின் ஆட்சி மொழி, அருள் மொழி, கடவுள் மொழி, தெய்வ மொழி, தேவ மொழி** .... ஆகும்.

பதினெண்சித்தர்கள் 1. ஒன்பது கடவுட் கலைகள், 2. ஒன்பது தெய்வீகக் கலைகள், 3. ஒன்பது பேய்க் கலைகள், 4. ஒன்பது நோய்க் கலைகள், 5. ஒன்பது தேய் கலைகள், 6. நாற்பத்தெட்டு அருட் கலைகள், 7. அறுபத்து நான்கு ஆய கலைகள், .... என்று இந்து மதத்துக்காகப் **பலவகைக் கலைகளைப்** (Arts) படைத்துள்ளார்கள்.

இவர்கள் அருளின் வெளிப்பாடுகளாக 1. அத்திறங்கள், 2. சாத்திறங்கள், 3. சூத்திரங்கள், 4. தோத்திரங்கள், 5. நேத்திரங்கள் .... என்று இந்து மதத்துக்காகப் **பலவகை அறிவியல்களை** (Sciences) படைத்துள்ளார்கள்.

இவர்கள் எண்ணற்று உருவாக்கியுள்ள **இந்து மதச் சட்டதிட்டக் கட்டுப்பாடுகள்** 1. குருபாணி, 2. குருமார் ஒழுக்கம், 3. பூசாவிதி, 4. கருவறைப் படி, 5. பலி நூல், 6. மட நூல், 7. அடுக்களைச் சாத்திறம், 8. படையல் நூல், 9. கஞ நூல், 10. மண நூல், 11. மோக நூல், 12. தாக நூல், 13. வேக நூல், 14. போக நூல், .... என்று பல உள்ளன.

இப்படிப் பதினெண்சித்தர்கள் கணக்கற்ற கோடியாண்டுகளாக அண்டபேரண்டம் முழுதும் பரவியுள்ள இந்து மதத்தை மிக மிகத் தெளிவாக வரையறுத்து **ஏட்டுலகச் செய்தியாகவும்** (Theoretical Information), **நாட்டுலக நடைமுறை அநுபவ அறிவாகவும்** (Practical Knowledge) தூய வாய்மைமிகு அமுதப் பைந்தமிழில் வழங்கி உள்ளார்கள்.

இப்பேருண்மைகளை உணர முடியாத குருடர்களும், உணர மறுக்கும் திருடர்களும் அன்னியர்களிடம் கைக்கூலி பெற்றுக் கொண்டு தமிழுக்கும், தமிழாக உள்ள இந்து மதத்துக்கும் துணிந்து துரோகிகளாக, விரோதிகளாகச் செயல்படுகிறார்கள். இவர்களை விடப் போலிகளும், நாத்திகர்களும் நல்லவர்களே. எனவே, இந்து மத மூலவர்களாகவும், காவலர்களாகவும் உள்ள தமிழர்கள் பொறுப்போடும், பொறுமையோடும் சிந்தித்துத் தங்களை இந்துக்கள் என்று உணர்ந்தும், உணர்த்தியும், உரையாற்றியும் செயல்பட வேண்டும்.

தமிழ்ப் பண்பாடு, தமிழ் நாகரிகம், தமிழின ஒற்றுமை, தமிழின உரிமை, தமிழகப் பெருமை, தமிழர் தன்மானம், தமிழின மானம், ..... முதலிய அனைத்தும் தமிழ்ப் பாரம்பரியத்தையே வளர்க்கும்,

விளக்கும் இந்துமதத்தில்தான் உள்ளன என்ற பேருண்மையில்தான் அனைத்து விடிவுமுள்ளன.

ஒவ்வொரு தமிழனும் சாதி, மதம், அரசியல் கட்சி, பதவி வெறி, பண வெறி, புகழ் வெறி .... முதலிய அனைத்தையும் கடந்து தன்னைத் தமிழினத்தான் என்று மட்டும் உணர்ந்து ஒன்றுதிரண்டு ஒற்றுமைப் பட்டால்தான் வருங்காலம் ஒளி நிறைந்ததாக இருக்கும். இந்த ஒற்றுமையை உருவாக்கும் அறிவியல் நிலையும், ஆற்றல் நிலையும், ஆர்வ நிலையும் தமிழ்மொழியில் உள்ள இந்து மதத்துக்குத்தான் உண்டு! உண்டு! உண்டு! என்று கூறி இவ்விளக்கத்தை நிறைவு செய்கிறேம்.



கருவறைக் கோபுரம் கொண்ட தஞ்சைப் பெரிய கோயில்

# <u>பூசை மொழி</u>

பதினெண்சித்தர்கள் இந்த உலகுக்கு கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலேயே பல ஆய்வுகளை நிகழ்த்த விண்வெளியிலிருந்து வந்தனர். அவர்கள், தங்களின் தாய்மொழியான தமிழ்மொழியில்தான் முதன் முதலில் பயிரினங்களும், உயிரினங்களும் உய்யும் பொருட்டு இந்து மதத்தைப் படைத்தனர். தமிழ்மொழியில் விண்ணையும் மண்ணையும் இணைத்துப் பயிரின உயிரின வாழ்வில் நலம் விளைவிக்கும் அருள் சார்ந்த கலைகளும், அறிவியல்களும் கணக்கற்றுப் படைக்கப் பட்டன. பிறகு, சித்தர்கள் தேவைக்கேற்ப உலகெங்கும் பல மொழிகளைப் படைத்துக் கொடுத்தனர்.

எனவே,

**'எல்லா மொழிகளுமே மதத்துக்குரியவையே',**

**'எல்லா மொழிகளுமே பத்தி, சத்தி, சித்தி, முத்தி வழங்கக் கூடியவையே',**

**'எந்த ஒரு மொழியும் அருட்சத்தி இல்லாத மொழி அல்லது பூசைக்குப் பயன்படாத மொழி என்று கருதுவது தவறு'**

.... என்பனவே பதினெண்சித்தர்களின் மொழிக் கொள்கை.

அதாவது, **"எல்லா மொழிகளும் சமமானவையே! சத்தானவையே! சித்திக்குரியவையே!"** - என்ற குருபாரம்பரிய வாசகமே இதுகாறும் கூறியவற்றின் சுருக்க விளக்கம்.

இந்த உலகிலுள்ள எல்லா வழிபாட்டு நிலையங்களுக்குமுரிய இடங்களைத் தேர்ந்தெடுத்து முறைப்படி அவற்றை 'அருள் ஊற்றுக்களாக' அமைத்தவர்கள் பதினெண்சித்தர்களே! எனவே <u>"அந்தந்த வழிபாட்டு நிலைய வட்டாரத்தில் பேசப்படும் மொழியே 'பூசைமொழியாக', 'கருவறை மொழியாக', 'அருட்சினை மொழியாக',</u>

‘அருள் வழங்கு மொழியாக’, ‘கடவுளையும் மனிதனையும் இணைக்கும் மொழியாக’ .... வல்லமையோடு விளங்கிடும் வண்ணமே பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும், இவர்களின் விந்துவழி வாரிசுகளும், குருவழி வாரிசுகளும் காலங்கள் தோறும் மொழிகளைப் படைத்துச் சமய நெறியைக் காத்து வருகிறார்கள்.

**அனைத்து மொழிகளும், சமயங்களும் சித்தர் நெறி எனும் கனிமலர்ச் சோலையிலே காய்த்தவைதான், பூத்தவைதான்**. மொழியாலோ, மதத்தாலோ மனித இனம் வேறுபடலோ! மாறுபடலோ! கூறுபடலோ! போரிட்டு மடிதலோ! .... தவறு! தவறு! தவறு! இம்மண்ணுலகில், **‘சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்’ உருவாக்கவே சித்தர்கள் மொழியையும், மதத்தையும் படைத்தனர்....”** என்ற குருபாரம்பரிய வாசகம் இங்கே குறிக்கப் படுவதுதான் சிறப்பு.

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்**




தாத்தா வடலூர் இராமலிங்க அடிகளார்

# அருட்பணி விரிவாக்கத் திட்ட உறுதிமொழி

1. பதினெண்சித்தர்களின் வாழ்வியல் நெறியான "**சித்தர் நெறி**"யே இந்து மதம். இதில் கலந்து விட்ட மூட நம்பிக்கைகள், மடமைகள், கற்பனைகள், .... முதலியவற்றை பயிற்சிகள் தருவதன் மூலம் அகற்றுவதே நோக்கம்.

2. உலக மதங்களுக்கு சித்தர் நெறியே தாய்! எனவே, அவரவர் தத்தம் மதவழி வழிபட்டு, அனுபவப் பூர்வமான வழிபாட்டு முறைகளைக் கற்றுத் தருதலே நோக்கம்.

3. அமைதியுடன், அன்புடன், நிறைவுடன், நிம்மதியுடன் இல்லறம் இனிது அமைய உதவும் ஆன்மீக உணர்வுகளை சித்தர் நெறி மூலம் வளர்க்கப்படுவதே நோக்கம்.

4. 'சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடைமைக் கூட்டுறவுச் சமுதாயம்' மற்றும் 'உலக ஆன்மநேய ஒருமைப்பாடு' முதலியவற்றை உருவாக்குவதே நோக்கம்.

5. சித்தர்களின் ஓகாசன, யோகாசன பயிற்சி மூலம் உடல், உயிர், ஆவி, ஆன்மா முதலியவைகளை வளமாக்குதலும், வலிமையாக்குதலும் நோக்கமாகும்.

6. மருத்துவ உலகில் தெரியாமை, புரியாமை, அறியாமை, புதிர், .... முதலியவை இருப்பதை முற்றிலும் மாற்றிடச் சித்தர்களின் மருத்துவக் கொள்கைகளை அனைவருக்கும் வழங்குதலே நோக்கம்.

7. மனித சமுதாய வேற்றுமைகள், ஏற்றத் தாழ்வுகள், மாறுபாடுகள், முரண்பாடுகள், குறைபாடுகள், பற்றுக் குறைகள், இயலாமைகள்,

வறுமைகள், தேக்கங்கள், வீக்கங்கள், முடக்கங்கள், ..... முதலிய அனைத்தையும் முற்றிலும் அகற்றிடச் சித்தர்களின் செய்திச் செழுமையிலும், கண்ணோட்டத்திலும் உலக வரலாறு, இலக்கியம், கலை, தொழில் முதலிய அனைத்துத் துறைகளையும் புதுப்பித்து எழுதுதலே நோக்கம்.

8. மானுட நலப் பாதிப்புகள், ஊழ்வினை, சூழ்வினை, ஆள்வினை, பாரம்பரியம், நாள், கோள், மீன், இராசி, காற்று, கருப்பு, பேய், பிசாசு, ஆவி, கண்ணேறு, .... முதலியவைகளின் ஆட்சியால் விளைகின்றன என்ற பேருண்மையை அடிப்படையாகக் கொண்டு அனைவருக்கும் நலம் விளைவிக்க அருட்பணி விரிவாக்கத் திட்ட யாகசாலைகள் மூலம் முயலுதலே நோக்கம்.

9. மதம், மொழி, இனம், சாதி, வட்டாரம், கட்சி முதலியவைகளின் பெயரால் திகழுகின்ற சர்வாதிகாரங்களையும், சுரண்டல்களையும், ஏமாற்றுக்களையும், அடிமைநிலைகளையும், .... முழுமையாக அகற்றுதலே நோக்கம்.

10. நாத்திகத்தாலும், மதமறுப்பாலும், வெறுப்பாலும், பண்பாட்டுத் துரோகத்தாலும், இன விரோதத்தாலும், தாய்மொழிப் பற்றின்மையாலும், நாட்டுப் பற்றின்மையாலும் ஏற்பட்டுவிட்ட இகழ்ச்சிகளை, தாழ்ச்சிகளை, வீழ்ச்சிகளை, இழப்புகளை ஈடு செய்வதே நோக்கம்.

**//<u>மூலம்:</u> இது வரையில் உள்ள அனைத்துக் கட்டுரைகளும் 1985இல் அச்சிட்டு வெளியிடப்பட்ட ‘ஓர் இந்துமத விளக்கம்’ என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டவை.//**

# சுருக்க விளக்கக் குறிப்புகள்

**இந்து மதம்**:- இன்று 'இந்து மதம்' என்று குறிக்கப் படுவது ஒரு மதமல்ல. இது ஒரு வாழ்க்கை நெறி. தனி மனிதர்களின் ஒழுக்கம் பேணவும்; பலரும் ஒருங்கு கூடி உறவைப் பேணி ஒற்றுமையாக வாழவும் உருவாக்கப்பட்ட 'சமுதாய ஒப்பந்தமே' இந்து மதம்.

**சித்தர் நெறி**:- பதினெண்சித்தர்களும், பிறரும் பல காலம் முயன்று உருவாக்கிய மறைகளும், முறைகளும், நெறிகளும், வேதங்களும், பூசாவிதிகளும், அருளாளர் ஒழுகலாறுகளும், ஆகமங்களும், மந்திறங்களும், தந்திறங்களும், எந்திறங்களும்..... உருவாக்கிய 'சித்தர் நெறி'யே இன்றைய இந்து மதம்.

**இந்து**:- கடவுள் நம்பிக்கை இருந்தாலும், இல்லாவிட்டாலும்; கோயிலுக்குச் சென்றாலும், செல்லாவிட்டாலும்; மதச் சாத்திறச் சம்பிறதாயச் சடங்குகளைச் செய்தாலும் செய்யாவிட்டாலும் ... இந்து சமயக் குடும்பத்தில் பிறந்த ஒவ்வொருவரும் இந்துவே; இறையருளுக்கு உரியவரே இவர்.

**மனிதராக இம்மண்ணுலகில் பிறக்கும் அனைவரும் இந்துதான்**. அதனால்தான், யாரையும் இந்துவாக மாற்றும் முயற்சிகளுக்கு முதன்மையில்லை; எந்த மதத்தவரும் இந்துவாக மாறலாம்.

**இந்துமத வழிபாடு**:- கோயிலுக்கு வந்து வழிபட ஓய்வும், வாய்ப்பு வசதிகளும் இல்லாதவர்களுக்காக நன்னாட்களில் கோயிலில் உள்ள 'எழுந்தருளிகள்' வீதி வழியாக ஊர்வலமாக எடுத்து வரப்படுகின்றன.

பழம்பிறப்புக்களின் தீய பலன்கள், ஊழ்வினைகளின் கடுமைகள், விதியின் கொடுமைகள், உலகியல் பாவங்கள்... முதலியவை அகன்றிடவே யாகங்கள் இயற்றப் படுகின்றன.

யாகத்தீயை நேரில் கண்டு வழிபட்டாலும், யாகப் பயன் சிறிதளவு உடம்பில் பட்டாலும் எல்லாத் தீமைகளும் அகன்று விடும். அதனால், உடலுழைப்போ, பொருளுதவியோ நல்கி யாகத்தில் பங்கு பெறலே பிறவிப் பயன்.

**யாகம்**:- இந்த 'யாகம்' எனும் பொதுச்சொல் ஐந்து வகையில் நெருப்பை வளர்த்து அங்கு இயங்கும் கடவுள் மூலம் அனைவரையும் அழைத்துப் பூசை செய்வதை விளக்கிடும்.

சித்தர்கள் (1) ஓமம், (2) ஓகம், (3) யாகம், (4) யக்ஞம், (5) வேள்வி எனும் ஐந்து வகைப்பட்ட நெருப்பு வழிபாட்டை வகுத்திட்டார்கள். இது 'ஐந்தீ ஓம்பல்', 'ஐந்தீ வேட்டல்', 'பஞ்சாக்கினி யாகம்' எனப் பல பெயர்களால் போற்றப்படுகிறது.

சித்தர் நெறி வழிவந்த சன்னிதானங்கள், பீடங்கள், இருக்கைகள், அமளிகைகள், ஆதீனங்கள், தம்பிரான்கள்,... முன்னின்று நிகழ்த்தும் யாகங்களுக்குப் பங்கு பெற அனைவரையும் அழைக்கின்றோம்.

**//மூலம்: இந்த விளக்கங்கள் 'பஞ்சாக்கினி அமைப்பு முறை விளக்கம்' என்ற கட்டுரையின் இறுதிப் பகுதியில் உள்ளன. இதன் நகல் கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது.//**

பதினெண்சித்தர்களின் படைப்பே இந்துமதம்.

விண்வெளியாரின் அருட்கொடையே இந்துமதம்.

பதினெண்சித்தர்களின் தத்துவமே இந்துமதம்.

இந்துமத எழுச்சியே இந்தியாவின் விழிச்சி.

இந்தியாவின் விழிச்சியே இம்மானுட நலச் செழுச்சி.

தமிழின் தாழ்ச்சியே தமிழின வீழ்ச்சி.

தமிழின வீழ்ச்சியே இந்துமத வீழ்ச்சி.

தமிழுணர்ச்சியே இந்துமதச் செழுச்சி.

தமிழே இந்தியப் பண்பாட்டுக்கும் நாகரீகத்துக்கும் உயிர்.

தமிழே இந்திய வரலாற்றுக்கு ஊன்று, சான்று.

//இந்த வாசகங்கள் 1985இல் வெளியாகிய ‘ஓர் இந்துமத விளக்கம்’ என்ற அச்சிட்ட புத்தகத்தின் வெளி அட்டையில் இருந்தன.//



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள்** இந்துமதத் தந்தையாகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினார். **இவர் ஒன்பது பிற்காலச் சோழர் குல மன்னர்களுக்குக் குலகுருவாகவும், அரசரில்லாக் காலங்களில் அரியாசனத்தில் அமர்ந்து அரசோச்சும் ஆட்சித் தலைவராகவும் வாழ்ந்திட்டார். தஞ்சைப் பெரிய கோயிலிலும், நாட்டின் பல பகுதிகளிலும் 'சிறுபள்ளி', 'பெரும்பள்ளி' என்ற கல்விக் கூடங்களை நடத்திப் பல கலைகளையும் முறையாக வளர்த்திட்டார்.**

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞானகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் குருவாணைப் படி இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை **ஞானகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் உள்ள, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd:933/2017) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

**www.newsletters.gurudevar.org** **www.gurudevar.org**
**www.induism.org** ***Email:*** **indhuism@gmail.com**
www.books.gurudevar.org